Registered No. M. 1159

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

இது
சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்
எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை.

மலர் 5. | சித்தார்த்தி ஹு ஆனிமீ - 1919 ஹு ஜுன்மீ / ,, ஆடிமீ - ,, ஜுலைமீ | இதழ் 6-7

உள்ளுறை. பக்கம்.


| | |
|---|---|
| மாணிக்கவாசக சுவாமிகள் துதி ... ... | 97 |
| ஸ்ரீ ஹரதத்தாசாரிய சுவாமிகள் சரித்திரம் ... ... | 98 |
| அர்ச்சாதீபம் ... ... | 103 |
| ஞானானந்தசம்பாஷணை ... ... | 110 |
| மாசபௌர்ணை பூஜாவிதி ... ... | 114 |
| அறுவகை உபசாரங்கள் ... ... | 118 |
| சிவாசாரியர்கள் ... ... | 119 |
| பரமாசாரியர் வணக்கம் ... ... | 121 |
| சிவநின்மாலியமான்மியம் ... ... | 122 |
| ஆசாரியமகிமை ... ... | 128 |
| சைவ சமய பரிபாலனம் ... ... | 134 |


இஃது
திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம்
ஸ்ரீலஸ்ரீ - சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளுக்குச்
சமர்ப்பிக்கப்பெறுவது.

பத்திரிகாசிரியர்
இருக்கம் - ஆதிமூலமுதலியார்,
(Retired Accountant, Military Accts., Department.)
நெ. 43, பாளையப்பன் வீதி, ஏழுகிணறு, சென்னை.

வைதிக சைவ அச்சுக்கூடம்,
நெ. 292, தங்கசாலை வீதி, சென்னை.
1919.

தபாற் செலவு உட்பட வருடச்சந்தா ரூபா ஒன்று.

# சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின்

## போஷகர்கள்.

---

ஸ்ரீமான்-யஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள்,
Dubash, Messrs. Best & Co.

,, வி. மாசிலாமணிப் பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல்.
Official Referee, High Court.

,, வி. முத்தையா பிள்ளையவர்கள்,
Merchant, Periyanna Moodaly Street, Madras.

,, ஆர். காசிவிசுவநாத முதலியாரவர்கள்,
Snuff & Tobacco Merchant, Madras.

,, திரு. சபாபதி முதலியாரவர்கள்,
Retired Sub-Engineer, Mint Street.

,, C. தருமலிங்கமுதலியாரவர்கள்,
Contractor, Mint Street, Madras.

## அறிவிப்பு.

சந்தாதாரர்கள் பலர் கடிதங்கள் எழுதும்போது தங்கள் சந்தா இலக்கத்தை யெழுதுகிறதில்லை. சிலர் 1159-என்று பத்திரிகையில் அச்சிட்டுள்ள பத்திரிகை இலக்கத்தை எழுதியனுப்புகின்றார்கள். இதனால் சிலசமயங்களில் கடிதம் எழுதவோர்களின் சரியானவிலாசத்தை யறிவது பிரயாசையாயிருக்கிறது. சந்தாதாரர்களின் இலக்கம் அவ்வவர்களுக்கு அனுப்பும் பத்திரிகையின்மீது சுற்றப்பட்டுள்ள காகிதத்தில் அவ்வவர்கள் விலாசத்தோடு சேர்த்து எழுதப்பட்டேனும் அச்சிடப்பட்டேனும் இருக்கிறது. இதனையே சந்தாதாரர்கள் அவசியம் தெரிவித்திடல் வேண்டும்.

## விளம்பரங்கள்.

### சைவம் முன்மலர்கள்.

பலர் வேண்டுகோளின்படி 1915, 1916 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த இப்பத்திரிகையின் முதலிரண்டுமலர்கள் இரண்டாம்முறை அச்சிடப்பட்டு இப்போது விற்பனைக்குச் சித்தமாயிருக்கின்றன. தபாற்செலவு உட்பட சந்தாதாரர்களுக்கு மலர் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரூபாவுக்கும், மற்றவர்களுக்கு 1¼-ரூபாவுக்கும் வி பி தபாலில் அனுப்பப்படும்.

மூன்றுமலரில் சில இதழ்கள் கையிருப்பிலில்லாமையால் அவைமீண்டும் அச்சிட்டபின்னரே மூன்றும்மலர் வேண்டுவோர்க்குஅனுப்பஇயலும்,

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 5. | சித்தார்த்தி ௵ ஆனி ௴ - 1919 ௵ ஜூன் ௴ | இதழ் 6.

## மாணிக்கவாசகசுவாமிகள் துதி.

(கோயிற்புராணம்.)

பேசுபுகழ் வாதவூர்ப் பிறந்துபெருந் துறைக்கடலுண்
டாசிலெழி றடித்தயர வஞ்செழுத்தா லதிர்த்தெழுந்து
தேசமலி தரப்பொதுவார் சிவபோக மிகவிளைவான்
வாசகமா மாணிக்க மழைபொழிமா முகில்போற்றி.

(இ-ள்.) பேசுபுகழ் வாதவூர்ப் பிறந்து = பேசப்படும் கீர்த்தியையுடைய திருவாதவூரிலே திருவவதாரஞ்செய்து (வாயுமண்டலத்திற் றோன்றி)—பெருந்துறைக்கடல் உண்டு = திருப்பெருந்துறையில் ஆனந்த சமுத்திரத்தைப் பருகி-(பெரிய துறைகளையுடைய சமுத்திரத்தைப் பருகி)—ஆசு இல் எழில் தடித்து அயர = பாசமில்லாத ஆன்மப்பிரகாசம் மிகுந்துச்செல்ல (குற்றமில்லாத அழகையுடைய மின்னல் உண்டாக)—அஞ்சு எழுத்தால் அதிர்த்து எழுந்து = பஞ்சாக்கரோச்சாரணத்தினால் (வாசனையைத்) தள்ளி மேலிட்டு (அம்செழுத்தால் அதிர்த்து எழுந்து = சலத்தினுடைய வளமையினாலே முழங்கி எழுந்து)—தேசம் மலிதரப் பொது ஆர் சிவபோகம் மிக விளைவான் = ஞானப்பிரகாச மிகும்படி கனகசபையிலே நிறைந்த சிவானந்தம் மிக விளையும்பொருட்டு (தேசங்கள் மலியும்படி யாவருக்கும் பொதுவாய் நிறைந்த நல்ல போகங்கள் மிகவிளையும்பொருட்டு)—வாசகம் ஆம் மாணிக்க மழை பொழி மா முகில் போற்றி = திருவாசகமாகிய மாணிக்க மழையைப்பொழிந்தருளிய, (திருவாதவூரடிகளாகிய) பெரியமேகந் துதிக்கப்படுவது. (எ-று.)

# ஸ்ரீ ஹரதத்தாசாரிய சுவாமிகள் சரித்திரம்.

இஃது

ஸ்ரீமத். ம. தி. பாநுகவி சுவாமிகளால்

எழுதப்பட்டது.

(5-வது மலர், 65-வது பக்கத் தொடர்ச்சி.)

இங்ஙனம் தாயார் சொல்லிய வார்த்தையைக் கேட்டவுடனே பாலர் வீட்டினின்றும் புறப்பட்டு வெளியே போந்து அக்கினீசுவரப் பெருமானையும் நந்திகேசுரரையும் சந்தியாகாலத்திலே போய் நமஸ்கரித்து நின்று "சம்புவே நீவிரே என்பிதா, உமாதேவியாரே என்தாயார், உமதுபுதல்வர்களாகிய விநாயகர் சுப்பிரமணியர் என்னும் இருவரே என் சகோதரர்கள், உமது ஆப்தர்களே எனது பரிசாரகர்கள். அங்ஙனமாயினும் உமது தரிசனங் கிடையாமையால், இவ்விடத்தே அடியேன் நாயையும் புழுவையும் ஒத்துத்திரிகின்றேன்; சுவாமீ! உம்மை அடியேன் நினையாமலும், உமது பூசையிலே வழுவினவனாயிருந்தாலும் தீனபந்துவாகிய நீவிர் உமது திருவருளினால் அடியேனைக் காத்தருளல் வேண்டும். விஷ்ணுமூர்த்தியினாலே உமது திருவடிகளும், பிரமாவினாலே உமது சிரசும் காணப்பட்டிலவாயின், அடியேன் சுவாமியை எவ்வாறு பூசிக்கவல்லேன்! அடியேனாகிய என்னை விசாரித்துக் காத்தருளல் வேண்டும். மழையில்லாது வாடிப்போனபயிர்போல உமது தரிசனங்கிட்டாது வாடிப்போயினேன். கிருபாநிதியே! அடியேனுக்குப் பிரசன்னராகுதிர். இன்று கொசுப்போலிருக்கு மடியேனிடத்துக் கிருபாவசத்தினாலே எழுந்தருளி பாலா எம்மிடம் வருகவென்று அடியேனை எப்போது அழைப்பீர். தாயில்லாப் பிள்ளைபோல அடியேனை இகழ்ந்து கைவிடாதீர். அடியார்க்கடியனாகிய பாலன்மீது மிகுதியும் வன்கண்மை செய்யாதீர். அடியேன் அநாதனாகிய தீனன். உமது பாதங்களையே சிந்தைசெய்தேன். உம்மைக்காண்டற்கு இச்சைப்பட்டேன். அடியேனுக்கு இப்போது பிரசன்னராவீர். அடியேன் பூமியிலேனும் கைலாசத்திலேனும் இருந்தாலும் என்? உம்மையின்றி ஓர் முகூர்த்தமாயினும் அடியேனுக்கு வாழ்வில்லை, மிகுதியும் தீனனாகிய அடியேனுக்கு நீவிர் பிரசன்னராகாதொழியில்

அஃது அநீதியாமன்றே. பின் எதுதான் உமக்கு நியாயமாய் முடியுமென்று இந்தப்பிரகாரம் அன்பினோடு தோத்திரஞ்செய்தார். அப்போது கிருபாநிதியாகிய சிவபிரான் உமாதேவியாரோடு ரிஷபாரூடராய் அவருக்குப் பிரசன்னராய் "குழந்தையே, இனி நீ அஞ்சற்க" என்று தமது திருவுருவத்தைத் தரிசிப்பித்தருளினார். உடனே சுதர்சனர் மிக்க விம்மித மடைந்தும் அநேக ஸ்தோத்திரஞ்செய்தும் பேரானந்தக்கண்ணீர்வார நின்றார். அப்போது சிவபெருமான் அவரைத் தழுவித் தம்மடித் தலத்திலேற்றி, உச்சி மோந்து, நம்மிடத்து இடையறாத பேரன்புடைய உனக்கு இப்போதுற்ற வருத்தத்தைச் சொல் என்று திருவாய்மலர்ந்தருளினார். அதற்குப் பாலர் சிவபிரானை நோக்கி, சுவாமீ! பிரமவிஷ்ணுக்களாலும் காண்டற்கரிய உமதருமைத் திருமேனியானது ஈண்டு பிரசன்னமாங்கால் முடிக்கக்கூடியதாயும், முடிக்கக்கூடாததாயுமுள்ளது யாது என்றார். உனக்கும் உன்தந்தைக்கும் இடையே நேர்ந்த மனவருத்தத்துக்குக் காரணம் யாது? என்று சிவனார் கேட்ப, அதற்குப் பாலர் அண்டமோரணுவாம் பெருமைகொண்ட நீவிரே ஆன்மாக்களுக்கு அருள்புரியுமாறு அணுவோரண்டமாஞ் சிறுமை கொண்டீராதலின், எம்மிருவர் விளைவெலாம் உமக்கே தெரியுமென்று தலையினாலே அவர் ஆஞ்ஞையை வகித்துச்சொன்னார். சொல்லவே, சிவபெருமான் ஸ்மிருதி இதிகாசாதிகளைப் படிப்பாயாக என்றார். அதற்குப் பாலர் படிக்கற்பாலனவாகிய சாஸ்திரங்கள் எண்ணில்லாதனவன்றே. அவற்றைப் படித்தற்குள்ள காலம் அற்பமன்றே. படித்தற்கு எய்தும் இடையூறுகளோ எண்ணிறந்தனவன்றே. பாலும் நீரும் கலந்தவிடத்து அன்னமானது பாலை மாத்திரங் கொள்ளுதல்போல, சுவாமீ சாரமாயுள்ளதையே அடியேற்கு உபதேசியும். சகலவேதபுராணங்களினாலும் அறியற்பாலர் நீவிரேயாம், ஆதலினால் உம்மை ஒருநெறியாகச் சிந்தைசெய்தல் ஒன்றையன்றி மற்றொன்றும் வேண்டேன் என்றார். அதற்குச் சிவபிரான் சுருதி ஸ்மிருதி முதலியவைகளி னன்றி எனது சொரூபத்தை அறியவும் அறிந்தபடி அன்புசெய்யவு மியலாய் என்றார். அதற்கு அவர் "சுவாமீ! என்னைப் பாலனென்று ஏய்க்கப்பார்க்கின்றீர். ஒருவன் தனக்குச் சிந்தாமணி கிடைத்தபின்னர், பலகறைக்கு ஆசைப்படுவானா" என்றார், அப்போது சிவபெருமான் தமது திருக்கரகமலத்தினாலே ஓர் யந்திரத்தை எழுதி அப்பாலருடைய சிரசிலே அமைத்து, எல்லாம் அறிந்தவனாகுதி என்று

நடவினர். அவ்வேளையில் அச்சிவபிரான் திருவருளால் வேதமுத லிய கலைகளெல்லாம் அப்பாலனுக்கு உதித்தன. அதன் பின்னர்த் தாம் தக்ஷிணாமூர்த்தியாய் எழுந்தருளியிருந்துகொண்டு, வைதிக சைவ விபூதியை சாபாலோபநிஷத மந்திரங்களினாலே பாலர்மேனி யிலே பூசி, அதன்பின்னர்த் திரிபுண்டரமாகத் தரித்து, உருத்தி ராக்ஷ மாலையணிந்து, பஞ்சாக்ஷரோபதேசஞ்செய்து, உத்தமமா கிய ஸ்படிகலிங்கத்தை அவர்கையிற்கொடுத்து, வேதசிவாகம விதிப் படி பூசாவிதியும் உபதேசித்து, சுதர்சனாசாரியர் என்ற பெயரை மாற்றி, அரதத்தாசாரியர் என்ற பெயரும் இட்டருளினர். அங்ங னமே, அரதத்தாசாரியர் சிவபிரான் திருவடித்தாமரைகளைத் தமது கண்களினின்று சொரிந்த ஆனந்த பாஷ்பங்களினாலாட்டி மயிர்ப் புளகத்தோடு நமஸ்கரித்தார். உடனே சிவபெருமான் தமது அரு மைத் திருக்கரத்தினாலே அப்பாலரை எடுத்து யாமப்போதிலே தானே ஆசிர்வதித்து, நீ போஜனஞ்செய்யும் பொருட்டுப்போவா யாக என்று சொல்லி ஆஞ்ஞைசெய்து தாம் சிவலிங்கத்திலே அந் தர்த்தானமாயினர்.

அரதத்தாசாரியர் இங்ஙனம் சிவபெருமானிடத்திலே மகா மந்திரமாகிய ஸ்ரீபஞ்சாக்ஷரோபதேசம்பெற்று, அவைதிகர்களா கிய வைஷ்ணவர்களை உத்தாரணஞ்செய்யும் பொருட்டு எழுந்தரு ளிய சிவபிரானை ஒத்தார். குருமூர்த்தியாய்ப் போந்த சிவபிரானை நமஸ்கரித்து, அவரைத் தமது இதய கமலத்தின்கண்ணே இருத் திக்கொண்டு வீட்டுக்குப்போயினர். அவ்வேளையிலே பிதாவான வன் வீட்டினுள்ளே கபாடபந்தனஞ்செய்து சயனித்திருந்தான்; தாயானவள் பாலனுடைய பசிநோயை நினைந்து வருந்திக்கொண் டிருந்தாள். சிவபக்த சிரோன்மணியாகிய அரதத்தாசாரியர் கத விலே தட்டிப் பசியினால் நொந்தேன், அன்னமிடுதி என்று உரத்து அழுதார்; உள்ளே நித்திரைசெய்த பிதாவானவன் சிவ பாதாம்பு ஜஸ்மரணராகிய அரதத்தாசாரியர் இயல்பை அறியாது அவர் வார்த்தையைக் கேட்டபோது கண்ணிணை சிவப்பேறக் கோபத் தோடு விழித்து இவ்வாறு சொல்வான். நான் சொல்லும் சொல் லுக்கு அமைவையேல் உனக்கு அன்னமிடுவேன். நீ எப்போதாயி னும் சிவனுக்குத் தொண்டுசெய்தால், பாஞ்சராத்திர ஆகமங்களைப் படியாதிருந்தால், வெள்ளேறு ஏறுவோன் கோயிலுக்கு நீ போனால் உன்னை நான் தண்டிப்பேன்; இங்ஙனம் அமையாது போவையா

இல் உன் கால்களைச் சேதிப்பேன் என்று சொன்னான். இதைக் கேட்ட பாலர் சிவசிந்தையில் விருப்புற்ற திரிசூலபாலராகிய தந்தையாரைப் புன்சிரிப்போடு நோக்கி, கௌதமமுனிவராலும், ததீசி முனிவராலும், கண்ணுவமுனிவராலும், உபமன்னியு முனிவராலும் பிரமனாலும், நந்திகேசுரராலும் சபிக்கப்பட்ட பிராமணருள்ளே நீயும் அகப்பட்டனையன்றோவாதலின், நினக்குப்பரமபதியான மஹாதேவருடைய உண்மை யொன்றுந் தெரியாது. சொல்வேன்கேள். அந்தத் தத்துவப்பொருளாகிய சிவபிரானை விஷ்ணுவானவர் நேத்திரக்கமலங்களினாலே பூசித்து வழிப்பட்டமையால், சிவபிரான் அவருக்குச் சர்வஞ்ஞத்துவத்தைக் கொடுத்தார் என்றறிகுதி. நீ யென்னை வேதமுதலிய வித்தைகளிலே பரீக்ஷித்துப் பார்க்குதி; பின்னரும் சிவபிரானை விஷ்ணுவானவர் நேத்திரத்தினாலே அர்ச்சித்தாரோ, அன்றோ? சொல் என்று கேட்டார். அதற்குத் தந்தையானவன் உலகத்தை வஞ்சிக்குமாறு பூசித்தாராதலால், இப்பூசை யதார்த்த பூசை யாகாது என்றான். அதுகேட்ட சிவபக்த சிரோன்மணியார் இங்ஙனம் ஒருவாறு உத்தரஞ்சொல்லிய பிதாவைப்பார்த்து விஷ்ணுவுடைய சர்வேசுரத்துவத்தை வேதாகம முறைப்படி பேசுதி என்று வாதித்தார். பிதாவும் பாலரும் இவ்வாறு வாதிக்கும்போது, அக்கிராமத்திலேயுள்ள வைஷ்ணவர்களும், சிவனடியார்களும் ஒருங்கு கூடினார்கள்.

உடனே அகர்த்தாவான அரியைக் கர்த்தாவாகக் கருதிய பாஞ்சராத்திரிகளின் மனத்திலிருந்து அஞ்ஞான விருளகலுமாறு எழுந்தருளிய ஸ்வாமி ஹரதத்தரைப்போல சூரியனுதயமாயினான், தந்தைக்கும் மைந்தனுக்கும் அரி அரர்களைப்பற்றிய தாரதம்மியவாதம் நடக்கின்றதென்று பிரஸித்தியாயிற்று. இதனால் சைவர்களும் வைணவர்களும் திரளாகச் சேர்ந்தார்கள். அன்றியுள்ள மதவாதிகளும் வந்து நெருங்கினார்கள். தினேதினே வாதம் விருத்தியாகியது. இதையுணர்ந்த ஊராள்வோனும் பிறருங் கூடினார்கள். பின்னரொருநாள் வைணவராதியர் இங்ஙனம் தந்தையும் மைந்தருமாகிய நீவிர் வெறும் வாதஞ் செய்வதாற் பயனில்லை; தீயிலிட்டுப் பழுக்கக்காய்ச்சிய இரும்புப்பீடத்தில் ஏறிநின்று அரியையேனும் அரனையேனும் நியாயமுகத்தால் சிறந்த பொருளென்று தாபித்தால் நாங்களந்த மதத்தை யடைகின்றோமென்றார்கள். உடனே மஹாப்பிரபுவான அரதத்தர் யானவ்வண்ணமே

செய்கின்றேனென்றார்; இந்த அரியவிடயத்தைக் கண்டுகளிக்க அனேகர் விரும்புவார்கள்; அதனால் பலதேயத்தினரும் உணர்ந்து வரத்தக்க ஒரு நன்னாளமைப்போமென நாளமைத்தனர்; அத்தினத்தில் திரண்ட சனங்கள் வந்து நெருங்கினார்கள். உடனே வைணவர்களைப் பார்த்து, வைதிக சைவவேதியர் முதலியோர் பாஞ்சராத்திரியர்காள் வம்மின் எம்மிறைவனாகிய அக்கினீச்சுரனதாலயத்திற்கு. அங்கே எங்கள் வைதிகவாரணர் உங்களாலிடப்பட்ட ஒழுகக்காய்ந்த இரும்புப்பீடத்திலேறியிருந்து சிவபெருமானே பரமென்று தாபிப்பாரென்றனர். அதற்குப் பாஞ்சராத்திரிகள் கோபத்துடன் நாங்கள் ஆனை துரத்தினும் ஆலயம் நுழையேம் என்று நியமம் பூண்டவர்கள்; ஆதலால் அவ்வரனாலய மடையேம்; எங்கள் பகவானான ஸ்ரீஹரியின் ஆலயமும் அதிவிசாலமானதே, அதற்குள் வந்திச் சிறுவன் சிவனே பரமென்றுரைத்துத் தாபனஞ்செய்வானாயிற் சரிதானென்று—'வயம்ருத்ரகுடீம்க்வாபி நமச்யமாஃகதாசந' என்பனவாதி வாக்கியங்களாலுரைத்தனர். உடனே அரதத்தர் அதற்குஞ் சம்மதித்து, அவ்வூரிலுள்ள வரதராஜஸ்வாமி ஆலயத்துட்சென்று, அங்கு வீற்றிருக்கும் சுவாமியான வரதராசரையன்புடன் வணங்கி நமஸ்காரஞ்செய்து துதித்து,—

"தேவதேவஜகந்நாத ஹரபாதாப்ஜசிந்தக
லிவபூஜாஸக்தசித்த சிவபக்தசிரோமணே
மஹாவிஷ்ணோ மஹாபாகசரணாகதவத்ஸல
ஸர்வோபநிஷதாம் சாரம்சிததத்யவேத்யதி
ததாத்வத்ஸந்நிதௌ தப்த லோகபீடமிதம்விபோ
இமாம்புசீதளம் பூயாதித்யுக்த்வாதத்ப்ரதக்ஷிணம்
க்ருத்வாத்யாத்வாமஹா தேவம்பார்வதீஸஹிதம்விபும்"

என்றுரைத்தாங்கு தேவதேவஜகன்னாதவாதி வாக்கியங்களால் அரியைவணங்கிஙின்சந்நிதியிலிருந்து சர்வஸாரமான உபநிஷதார்த்தங்களால்சிவபரத்துவஸ்தாபனஞ்செய்யப்போகின்றேன். ஹே ஸ்வாமி யான் ஏறப்போகின்ற காய்ந்த இரும்பு முக்காலியானது குளிர்ந்த ஜலத்தைப்போல ஆகவேண்டியது. என்றுரைத்து நின்றனர். உடனே வைணவர்கள் தீயிலிட்டு உருகக்காய்ச்சிய பெரிய இரும்பு முக்காலியைக்கொண்டுவந்து கருடனுக்கும் வரதராஜஸ்வாமிக்கும் நடுவில் இட்டார்கள். உடனே அரதத்தாசாரிய சுவாமிகள் அதனைப் பிரதக்ஷிணஞ்செய்து, உமாதேவி சமேதராகிய சிவபெருமானைத்

தியானித்து, அந்த அயபீடத்திருந்து, சைவவைஷ்ணவர்களுள்ளே சிவநிந்தகர்களாகிய வைஷ்ணவர்களைநோக்கி தத்துவார்த்தமாகிய சதுர்வேத தாற்பரியசங்கிரகம் என்னும் சுருதிசூக்திமாலையினாலும், அன்றியும் மந்திரசிரேஷ்டமான கர்த்தாவாக இருதலினாலும், தசரதன் பிள்ளையான இராமன் இலிங்கந் தாபித்துப் பூசித்தமையானும்; கண்ணன் ஸ்ரீகைலாயத்தைபடைந்து துதிக்க அவற்குப் பிள்ளையை அளித்தமையானும்; நூற்றிதழ்க் கமலமலர்களாலும், தன்கண்மலராலும் பூசிக்க வவற்குச் சக்கர மீந்தமையாலும் பசுபதி சகல தேவர்களுக்கும் முதல்வனாகின்றான்; மன்மதனை யழித்தமையாலும், ஆலத்தை யுண்டமையாலும், எமனுடைய கர்வபங்கஞ் செய்தமையாலும், அசுரர் வாழ்ந்த முப்புரங்களை யழித்தமையாலும், தக்கனுடையயாகத்தை யழித்தமையாலும் அருச்சுனனுக்குத் தன்பெயருள்ள அம்பினை அளித்தமையாலும், நரசிங்கத்தை வதைத்தமையாலும், கண்ணன்கொண்ட (மோகினி) பெண்ணுருவைக்கலந்து சாத்தனைப் பிள்ளையாகப் பெற்றமையாலும் பசுபதி சகல தேவர்களுக்கு முதல்வனாகின்றான்.

(இன்னும்வரும்.)

---

## அர்ச்சாதீபம்.

---

(5-வது மலர், 58-வது பக்கத் தொடர்ச்சி.)

மஹாநாராயணோபநிஷத்தில், "சைவமீசாந கைவல்ய மாசாத்ய சிவம் த்யாத்வா........." எனவும், "ஸர்வைஸ் ஸமந்விதஸ் ஸமஸ்த மோக்ஷசாம்ராஜ்ய.........." எனவும் பெறப்பட்ட பகுதிகளால் ஸ்ரீ பரமேஸ்வராராதனம், அபிஷேகம், அர்ச்சனை, அலங்காரம், பிரதக்ஷிணம், நமஸ்காரம், வர்க்யம், இத்யாதி உபசாரங்களோடு நடத்துமுறைமை வெளிப்படுகின்றது. இத்தகையவசனங்கள் அந்தவுபநிஷத்தில் பல விடங்களிலும், ஏனையுபநிஷத்துக்களிலும் ஏராளமாகப் படிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் பூர்வபட்சிகள் ஒராமொருபோதும் பார்த்துங் கேட்டுமிரார்கள். இப்படிப் பிரமாணபாஹுள்யங்களைப்பெற்றிருக்கும் அர்ச்சாராதனம் ஒருபோதும் பாதிக்கப்படமாட்டாது. இதனை நிந்திப்போர் அவைதிகராவதிலுந் தட்டில்லை. இன்னும் விரிக்கிற்பெருகும்.

ருக்வேதத்தில், "ஸத்யம் பரம் பரமம் நித்யம்......" எனவும், "பல்லிங்காத்வாரிணே........" எனவும் போந்த பகுதிகளில் ஸ்தாணுரூபமாகிய சிவலிங்கத்தை வர்ணித்திருக்கின்றது. "ப்ரஹ்மா விஷ்ணூ ரஜஸாபத்த வைராமத்யே......" என்று வேதத்தில், பாஸ்கரஸம்ஹிதையிற்போந்த வசனத்தால் ஸ்ரீருத்ரபகவான் சண்டையிட்டுக்கொண்டிருந்த பிரஹ்ம விஷ்ணுக்களுக்கு மத்தியில் அக்னிஸ்தம்பமாகப் புவனங்களை ரக்ஷிக்கும்பொருட்டுத் தோன்றினார். அவர்களிருவரும் அந்த ஸ்தம்பத்தின் கீழும்மேலுமாகத் தேடிக்கொண்டுபோனார்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இன்னும், "ப்ரஹ்மாவை ஹம்ஸோபூத்வா" எனவும், "விஷ்ணூர்வை வாராஹம் ரூபமாஸ்தாய" எனவும் போந்த ருக்வேதவசனங்களாலும் மேலுண்மை பிரஸித்திக்கின்றது. இவற்றால், பிரஹ்மவிஷ்ணுக்கள் அடிமுடிதேடியறியாத ஸ்ரீமத், அருணாசலக்ஷேத்திரம் பிரஸ்தாபத்துக்கு வருகின்றது. இந்த அருணாசலமேயன்றி, "ஸபாப்யஸ் ஸபாபதிப்யஸ்சபூந் நமோநம:" என்னுஞ் சுருதியால் ஸ்ரீசிதம்பரக்ஷேத்திரமும், வெளியாகின்றது. இதனால், திருக்கோயில்களும், திவ்ய க்ஷேத்திரங்களும் வேதத்திற் பெறப்பட்டிருக்கும் ரஹஸ்யங்கள் வெளியாயின. மேலே ஓரிடத்தில் காசிக்ஷேத்திரம் உபநிஷத் பிரதிபாதகமாதலையுங்காட்டினோம். இப்படிப் பலவாக எடுத்துக்காட்டி வருவதில் யாமுபரதியடைந்தோம். இதுகாறுஞ்செய்த விசாரத்தால்பிரஹ்மத்துக்கு ரூபமில்லையெனவும், அது அரூபமேயெனவும், அதனை மனத்தினாற் சிந்திப்பதேயன்றி விக்கிரகரூபங்களாகப்பூசிப்பதும், திருக்கோயில்களிற் பிரதிட்டித்து ஆராதிப்பதுங் கூடாதெனவும், நமது நவீன ஸமாஜத்தார் மனப்பால் குடித்து நாட்டவெழுந்தது கோட்டமுற்றழிந்தது.

தமது ஸித்தாந்தத்தை நாட்டுவதற்கு நம்மவர்கள் வேதவேதாந்தங்களையே பிரமாணமாகக்கொண்டார்கள். அவ்வளவேயன்றி, அவைகளைப் பிரமாணமாகக்கொண்ட பூர்வாசாரியர் ஸித்தாந்தங்களைவற்றினுஞ் சேராதொழிந்தார்கள். அன்னோர் வேதவேதாந்தங்களைத் தழுவியதற்கு நியாயமுஞ்சொல்லாதொழிந்தார்கள். அவற்றைத் தழுவியிருக்கும் பூர்வீகர்களெல்லாம் அவை பரமாப்தராகிய கடவுள் வாக்கென்றே கொண்டிருக்கின்றார்கள். சிலர் கடவுளது சுவாசம் என்று கூறுகின்றார்கள். இன்னுஞ் சிலர் அவை சுயம்பு என்று கூறுகின்றார்கள். இந்தப்பட்சங்களில் நம்மவர்

கொண்ட பட்சம்யாது? கடவுள் திருவாக்கு, அவரது சுவாசம் என்று கூறவிடமில்லை. கடவுளுக்கு உருவத்தையும், அந்த உருவத்தில் வாய், மூக்கு முதலியவைகளையும் அவரங்கீகரியாமையால். இனிச்சுயம்பு என்பதே அவர்கோளெனின், சுயம்பு என்று கூறும் ஏனையோர்கொள்கையிலொன்றாகி அழியும். கடவுடான் ஸ்வயம்பு, வேதங்கூட ஸ்வயம்புவா? என்று அவரே கடாவுவதால், அவர் கூற்று அதுவுமல்ல. ("மறைசுயம்பென்ப வம்மறை மேலாமான மென்பெறுமெனிலந்தோ, நிறைமதியின்றிக் குழறுபவேத நீடொலி மயமெனினதனை, யறைதுவர்சடமா யாதலினதுதா னருளுமோநனி விவத்தையிலென், றிறைவனெந்தணிகைத் தேசிகனதமற் றென்னுரையென விசைத்தனனே".) என்னும் நியாயவாயிலாகவும் அது அழியும். அவர் முடிவுதான் யாது எனின், முன்னிருந்த அறிஞர் கூறியதே அது என்பதாம். இது கேவலம் அஸாமஞ்சஸமென்று விளக்குவாம். எங்ஙனமெனின், முன்னிருந்த அறிஞர் கூறினாரெனின், அவர்யாவர்? அதற்குப்பிரமாணமென்னை? வேதத்தைக் காட்டிலும் வேறுபிரமாணம் வேண்டாத அவரை வேதங்கைவிட்டவாறென்னை? இவ்விஷயத்தில் அவரும் வேதத்தைக் கைவிட்டவாறென்னை? வேதத்தில், "ஏடப்ரஹ்மாணம்விததாதிபூர்வம்......" என்னும்மந்திரத்தால் வேதமுதலிய ஸர்வவித்தைகளையும் பிரஹ்மாவுக்குச் சிவன் கொடுத்தருளினாரென்று வெளிப்பட்டவாறென்னை? கைவல்யசுருதியில், "வேதைரநேகைரஹமேவவேத்யோ......" என்னும்மந்திரத்தால் ஸகலவேதங்களிலும் நானே பிரதிபாத்யன். வேதாந்தங்களைச் செய்தவனும் நானே. அவைகளை அறிந்தவனும் நானேஎன்று சிவன் கூறியவாறென்னை? அன்றியும், "ஈசாநஸ் ஸர்வவித்யாநாம்." என்னும் மந்திரப்பொருளும் அவருக்கு வேம்பாய் விட்டவாறென்னை? வேதங்களே எமக்குத் தாரகம் என்னும் அவர் கூற்றுவெறுங்கூற்றாயினமையால், அவ்வேதங்களுக்கும் அவர்களுக்கும்ஒளிக்கும் இருளுக்குமுள்ள ஸம்பந்தமே நிலைக்கும்! நிலைக்கும்!!.

அது அறிஞர்வாக்கெனின், ஒருவர்வாக்கா? பலர்வாக்கா? ஒருவர்வாக்கெனின், நம்மபூர்வபட்சிகள் கொள்ளத்தக்கதும், தள்ளத்தக்கதும் அதிற்போந்தவாறென்னை? தள்ளத்தக்கதைக் கூறுவோர் அறிஞராதல் எங்ஙனம்? பலர்வாக்கெனின், தள்ளத்தக்கதைக்கூறும் அறிவில்லாதோரும், கொள்ளத்தக்கதைக்கூறும் அறிவுடையோரும் ஒன்றுசேர்ந்துரைத்தல் பாங்ஙனம்? இரண்டும் வேத

மாதலும் யாங்ஙனம்? இதனால், அது அறிஞராகிய ஒருவராற் செய்யப்பட்டதுமல்ல. பலராற் செய்யப்பட்டதுமல்ல. இன்னும் அறிஞரென்னப்படுவோர் எத்தகையோர்? ஒருவருக்கு அறிவு இயல்பாகவே விளங்குவதா? கல்வி கேள்விகளால் விளங்குவதா? இயல்பாகவே யெனின், உலகில் யாவருங் கற்பதுங் கேட்பதும் அவலமாக முடியும். அன்றியும், அது அநுபவத்துக்கும் விரோதம். நமது ஸமாஜநண்பரும் அதற்குச் சான்றாவர். எங்ஙனமெனின், தமக்கு அறிவு இயல்பாகவே விளங்குமெனின், அறிஞர் வாக்காகிய வேதம் என்று வேறொருத்தர்வாக்கைத் தாம் தழுவுவது என்னை? (தான்கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு) என்று அறிஞர் கூறினாராகையால், அறிஞர்செய்த நூல்களிற் பழகினாலல்லது அறிவு விளங்காதெனல் தேற்றம். ஆகவே, நமது ஸமாஜநண்பர் அறிஞர் வாக்காகத் தேர்ந்தவேதம் அந்த அறிஞர் வேறு எந்த அறிஞர் வாக்கிற் பயின்று செய்தாரென்று கொள்வது? அப்படியே மேனுக்குமேற் போகுங்கால் எல்லாவறிஞரும் ஒருதன்மையினரேயாவர். அதனால் முடிவுதேறாது. கடவுளைப்படைத்தவர் வேறு எந்தக் கடவுள் என்னும் உலகாயதமாகவே அதுமுடியும். இந்த வியவஸ்தையால் வேதமானது இயற்கையறிவும், முற்றறிவுமுடைய ஸர்வஜ்ஞராகிய சிவபெருமானால் செய்யப்பட்டதென்றறிவதே துணிவு. செயற்கையாகவறிதலும், ஒவ்வொன்றாகவறிதலும், அறிவித்தாலறிதலுமாகிய கிஞ்சிஜ்ஞநிலைபெற்ற பசுவர்க்கத்துள், அறிஞரென்று பேர்படைத்த பெரியோரால் அது செய்யப்பட்டதெனல் தவறுடைத்து.

இந்த அபிப்பிராயத்தைக் குப்தமாகவைத்துக்கொண்டு அன்னோர் வேறு போக்குங் காட்டுகின்றார்கள். என்னெனின், "வேதம் அபௌருஷேயமென்று அனைவராலும் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அபௌருஷேயமென்பதினாலே தேவகிருதமென்று ஏற்படுகிறதல்லவா? ஐத்திரீயபிராமணம் முதலாவது பஞ்சிகை முதலாவது அத்தியாயத்தில் பொய்சொல்வோர் யார், மெய்சொல்வோர் யார், என்று சிஷ்யனால் கேட்கப்பட்டு, தேவர்கள் மாத்திரமே பொய்தீர்ந்த மெய்யுரைப்பவர்களென்றும், மனிதர் சாதாரணமாய்ப் பொய்யுரைப்பவரே யென்றும் உரைத்திருப்பதினாலும், வேதம் அபௌருஷேயமென்றும், புராணாதிகள் மநுஷ்யகிருதமென்றும் ஏற்படுகிறபடியாலும், வேதத்தில் அபாதிதப்பிராமாண்

ணியதா புத்தியுண்டாக வேண்டியதற்கும், புராணுதிகளில் சங்கை
ஜநிப்பதற்கும் போதுமானஹேது மேற்குறித்த சுருதிவாக்கியத்
தில் அடங்கியிருக்கின்றது" என்று கூறுவதேயாம். இதன் மகிமை
யையுங் கொஞ்சம் விசிதப்படுத்துவாம். அபௌருஷேயம் என்ப
தற்கு மனுஷ்யனுகிய புருஷனும், கடவுளாகிய புருஷனுமாகிய இரு
வராலுஞ் செய்யப்பட்ட தல்லவெனவும், அதனுல் அது அபௌரு
ஷேயமாயிற்றெனவுஞ் சிலர் சொல்லுகின்றூர்கள். அதுவே சுயம்பு
என்பதற்குங் காரணமென்பார்கள். வேறு சிலர் மனுஷ்யனுகிய புரு
ஷனுற் செய்யப்பட்டதல்ல வென்பதையே அது விளக்குமெனவும்,
அதனுல் அது கடவுளால்செய்யப்பட்டதென்பது தேற்றமெனவும்,
ஸ்வயம்பு என்று அதற்குப்பேர்வந்தது அதை ஆக்கியோரது பெய
ரெனவும், ஸ்வயம்பு என்று கடவுளுக்குப் பேராகையாலும், ஆக்கி
யோர்பெயர் நூலுக்குவருவது மரபாகையாலும், அகத்தியம்,
தொல்காப்பியம் இத்யாதிகள் அதற்குச் சான்றுகையாலும் ஆக்கி
யோராகிய கடவுள் பெயரே அவர்செய்தருளிய வேதத்துக்கு வந்த
தெனவுங் கூறுவார்கள். இவ்விரண்டில் அது கடவுள் வாக்கென்
பதே சரியெனவும், அது தானேயுளது என்பது சரியல்லவெனவும்
நியாயங்காட்டி மேலிடத்தில் யாம் மறுத்திருக்கின்றோம். ஈண்டு
நமது ஸமாஜநண்பர் அதனைத் தேவர்கள் செய்தார்களென்னும்
விந்தை எப்படிப்பட்ட தென்பதையுங் கொஞ்சம் யோசிப்பாம்.

தேவர்கள் மெய்யுரைப்பவர்கள் என்பது தேவர் யாவர்க்குமே
யன்றி ஏகதேசிகளுக்கெனல் கூடாது. யாவரும் மெய்யுரைப்பவர்க
ளாகிறபோது அவர் வேதத்தைச்செய்தது யாவர்பொருட்டு? ஒவ்
வொருவரும் மெய்யை யுணர்ந்துசொல்லும் அதிகாரிகளாகிற
போது அவர்களில் ஒருவருக்கொருவர் தெரிவிக்கவாவது, ஒருவ
ரிடமொருவர் தெரிந்துகொள்ளவாவது அவசியமில்லை. தெரிவிக்
கும்போதும், தெரிந்துகொள்ளும்போதும் பொய்யின்றி அவர் பிர
வர்த்திப்பாரென்பதே எமது கருத்தன்றி அவருக்கு மெய்யெல்
லாந் தாமே யுணரவாவது, உணர்த்தவாவது கூடுமெனல் கருத்
தல்லவெனின், அப்போது அவர்களுக்கு உணர்த்துகின்றவர்வேறு
யாவர்? வேறே யொருவரேற்படுகையில் அவரைச்சுட்டி விளக்கா
மலும், அவரது யோக்யதை விளக்காமலுந் தவறிப்போனவா
றென்னை? அதவா தேவர்கள் சொன்னதாக வொப்புக்கொண்டா
லும் எத்தனைபேர் கூடிச்சொன்னது? அவர் ஒவ்வொருவரும்

மெய்மையுணர்ந்தவர்களாக, அவருள் ஒருவர்சொன்னால்போதாதா? ஒருவர் சொல்ல ஆற்றல் போதாதென்று, ஆயுள்போதாதென்று, அல்லது கேட்குமதிகாரிகள் அபரிமிதமென்று பலராகச்சொன்னது? இன்னும் அந்தத்தேவர்கள் எத்தகையோர்? எங்கே வசிப்பவர்கள்? வேதத்தை அவர்கள் என் சொன்னார்கள்? தாமே சொன்னார்களா? அவர்களைச்சொல்லும்படி யாராவது விதித்தார்களா? இவர்கள்கதியே இவ்வாறாக, மானிடர்கதியை யாம் பேசவும்வேண்டுமோ? மனிதர்களைச் சாதாரணமாய்ப் பொய்பேசுவோரென்றார். அதனால், தேவர்களுக்கு எப்படி மெய்யானது நைஜமோ, மனிதர்களுக்கு அப்படிப் பொய்யானது நைஜமாகின்றது. மேல் செய்த வியவஸ்தையால் அது தேவர்களுக்குப் பயன்படாமை வெளிப்பட்டமையால், மனிதர்களுக்கே பயன்படவேண்டியிருக்கின்றது. பொய்யே வடிவமாகிய மனிதர்களுக்கு மெய்யாகிய வேதம் பயன்படுவதெங்ஙனம்? கறுப்புநிறமான நாய் வெள்ளைநிறமாவதெங்ஙனம்? 'உள்ளது போகாது, இல்லது வராது' என்னுந் தருக்கத்தால் மனிதருக்கு உள்ளதாகிய பொய் போகாது. இல்லதாகிய மெய் வாராது. நம்மதோழரும் மனிதரேயாகையால், அவர்க்கும் அது பயன்செய்யாது. அதனை எம்போலிய மனிதர்களுக்கு அன்னோர் தெரிவிக்க முயல்வதுஞ் சிறவாது. மனிதர்களுக்குப் பயன்படாததைத் தேவர்கள் சொன்னாரென்பதும் நிலையாது. இப்படி அழிந்தொழிவதாகிய வேதத்தினாக்கியோர் தன்மையை இனி நம்மவர் மறந்துவிடுவாராக. இந்தவிசாரத்தால் அது கடவுள் வாக்கியமென்று யாம் நாட்டியதே சிறக்கும். அதனால், அவர உருவமுடையவராதலும் இனிது நிலைக்கும். தேவர்கள் காலநீட்சியா லிறக்குங் காரணத்தைநோக்கி அவரை அமரர் என்று சொல்லுவதுபோல அவர்க்கு மனிதரைக்காட்டிலும புண்ணியம் அதிகரித்தமையால், அவரை மெய்சொல்லுவோரென்று உபசாரமாகக்கூறியதாம். அவருக்கு ஆதிக்யம்பிறக்கவே மனிதரையுந் தாழ்வுகூறியதாம். மனிதர்கள் தேவர் பிறப்பை விரும்பிப் புண்ணியத்தை ஈட்டிக்கொள்ளத் தூண்டியதும் அதுவாம். இதனால் தேவர்கள் அதிகமெய்யும், கொஞ்சம் பொய்யும, மனிதர்கள் அதிகபொய்யும், அற்பமெய்யு முடையரென்பதே ஸித்தாந்தமாகும்.

இன்னும், தேவர்களை வேதத்துக்கு வக்தாக்களாகக் கண்டு பிடித்ததுபோலவே மனிதர்களைப் புராணத்துக்கு வக்தாக்களாக நம்மவர் கண்டுபிடித்தார்கள். வேதத்தைத் தேவர்கள் செய்தார்களெனவும், புராணத்தை மனிதர்கள் செய்தார்களெனவும் பிரமாணங்காட்டாமல் நம்மவர் கூறுவது நலஞ்செய்யமாட்டாது. மனிதர்களுக்கு வேதம் உதவாது என்று யாம் கூறியதை நம்மவர் மனிதர்கள் பொய்யாகிய புராணத்தைச் செய்தார்களென்று கூறியதுஞ் சான்றுரைக்கும். மெய்யாகிய வேதோபதேசம்பெற்றும், மனிதர்கள் அந்த வுபதேசப்பயனையடையாமல் பொய்யாகிய புராணத்தையே செய்தார்களன்றோ? சபாசு நன்று! நன்று!! புராணத்தைப் பொய்யென்று நம்மவர் நாட்டத்துணிந்தார்கள். ஆயினும், அவர் மதமாகியமெய்யை அநுசரித்ததும் சில அதிலிருக்குமென்பதில் அவர் ஆட்சேபியார்களென்று நம்புகிறோம். மெய்யுங் கொஞ்சங் கலந்திருக்கும்போது புராணத்தைக் கேவலம் பொய்யென்றதும், அது சொன்னவர்களைக் கேவலம் பொய்யர்களென்றதும் பெருந்தாழ்வு. நம்மவர் பொய்யென்ற புராணத்தில் கொஞ்சம் மெய்கலந்ததை அவரங்கீகரிக்கிறபடியே அவர் மெய்யென்ற வேதத்தில் கொஞ்சம் பொய்கலந்திருக்குமென்றும் அவர்கொள்ள வேண்டியது. வேதத்தில் ஒருவிஷயமே இரண்டிடங்களில் ஓரிடத்துக்கு மற்றோரிடம் விரோதமாகச் சொல்லப்படுகிறது எனவும், இரண்டையும் விரோதம் பாராட்டாது அங்கீகரிக்க வேண்டியதெனவும் அவர்கள் அங்கீகரித்திருக்கின்றனர். ஒரு விஷயத்தில் விரோதித்த இரண்டு பிரமாணங்கள் ஒப்பத்தக்கனவன்று என எற்படுநியாயத்தால், வேதம் அடங்கலும் மெய்யெனவாவது, அதைச் சொன்ன தேவர்கள் யாவரும் மெய்யர்களெனவாவது கூறவிடமில்லை. நம்மவர் கண்டுபிடித்த ஸித்தாந்தம் இப்படி நலங்குலைந்தழிதலால், இனி விண்சோலிக்குப் போகாதிருப்பாராக. இதுகாறுஞ்செய்த விசாரத்தால் வேதமானது ஸ்ரீபரமேசுவரனாற் செய்யப்பட்டதென்னும் ஸித்தாந்தமே நிலைதளராது நின்றது. அதனை வற்புறுத்தற்குப் பின்வரும் உண்மைப்பிரமாணங்களே போதும். "படைப்பாதிதொழிலும்பத்தர்க் கருளும்பாவனையுநூலு, மிடப்பாகமாதராளோ டியைந்துயிர்க்கின்பமென்று, மடைப்பானுமதுவுமுத்தி யளித்திடுமியோகும்பாசந், துடைப்பானுந்தொழிலுமேனிதொடக்கானேற்சொல்லொணாதே" எனவும், "ஆரணமாகமங்களருளினா லுருவுகொண்டு, காரணனருளானாகிற் கதிப்பவரில்லை

யாகு, நாரணன்முதலாயுள்ள சுரர்நரர்நாகர்க்கெல்லாஞ், சீரணிகுரு சந்தானச் செய்தியுஞ்சென்றிடாவே" எனவும், போந்தசைவாசாரியர் திருவாக்குகளே அவையாம. இவ்வாறு வேதத்தின்றன்மையை அறியாதபோது நம்மவா வேதஸம்பந்திகளாதலும், அதனாற் பெரும்பயனெய்தலுங் கூடாது. வேதபாஹ்யரென்று அவரைக் கூறுவதே சிறக்கும்.

(இன்னும் வரும்)

---

## ஞானனந்த சம்பாஷணை.

---

சோக்கலிங்கம்.—சுவாமி, நமஸ்காரம்.

ஞானனந்தர்.—சொக்கலிங்கம், க்ஷேமமா?

சொ.—உங்களாசீர்வாதத்தால் க்ஷேமமாகவே இருக்கிறேன்.

ஞா.—வேறு விசேடம் ஏதேனும் உண்டோ?.

சொ.—சுவாமி, நெடுங்காலமாக என்னிடம்ஒரு சந்தேகமிருக்கிறது. அதைப் பலரிடமும் சொல்லிப்பார்த்தேன். ஒருவராவது இது வரையில் அச்சந்தேகத்தைத் தீர்க்கவில்லை. ஒருக்கால் தாங்கள் தெளிவிப்பீர்களென்று நினைக்கிறேன். ஆதலால் உத்திரவு கொடுத்தால் அதைச்சொல்லுகிறேன்.

ஞா.—அப்பா, உலகத்தில் முற்றிலும் உணர்ந்தவர் ஒருவருமில்லை. எல்லாம் வல்ல கடவுளே முற்றுமுணர்ந்தவர். ஆதலால் நான் உன் சந்தேகத்தைத் தெளிவிப்பேனென்று உறுதியாய்ச் சொல்ல முடியாது. நீ அதைத் தெரிவித்தால் என்னால் கூடுமானல் விளக்கச் சித்தமாயிருக்கிறேன்.

சொ.—சுவாமி, கடவுள் என்னை ஏன் சிருட்டித்தார்.

ஞா.—நீ அவரை வணங்கி நற்கதியடையும்படி உன்னைச் சிருட்டித்தார்.

சொ.—நான் அவரை வணங்கி நற்கதியடைந்தால் அவருக்கென்ன இலாபம்?

ஞா.—அதனல் அவருக்கு யாதொரு பிரயோஜனமுமில்லை, உனக்குத்தான் பிரயோஜனம்.

சொ.—என்னை அவர்படைக்காமலே இருப்பாரானுல் நான் அவனை வணங்கவேண்டுவதும் நற்கதியை யடையவேண்டுவதும் இல்லையே. அஃதோடு பாவஞ்செய்து துன்பம் அடைதற்கும் ஏதுவில்லாமற் போகுமே. அவர் என்னைப் படைத்ததனுல் எனக்குத் துன்பம் உண்டாகிறதேயன்றி யாதொருபயனும் உண்டாகவில்லையே.

ஞா.—அப்பா சிருட்டியின் இலக்கணம் தெரியாமல் இப்படிப்பேசுகிருய். இப்போது என்னுடன் பேசுகிற நீ யார்? இந்தச் சரீரமோ, இந்தச் சரீரத்திற்கு வேருயதொருபொருளோ.?

சொ.—இந்தச் சரீரம் அறிவில்லாத பொருளாயிருக்கிறது. நானோ அறிவுடைய பொருளாயிருக்கிறேன். ஆதலால் நான் இந்தச் சரீரமல்ல. இதற்குவேருய அறிவுருபமான பொருள் நான் என்று அறிகிறேன்.

ஞா.—நீ மிகவும் அறிவாளி. இனி உன்சந்தேகத்தைத்தெளிவிப்பது சுலபந்தான். நீ எப்படி உண்டாயிருக்கலாமென்று உனக்குத் தோன்றுகிறது?

சொ.—மாதாபிதாக்களின் சுக்கில சுரோணிதங்களால் இச்சரீரம் உண்டாயிற்றென்பது மாத்திரம் எனக்குத்தெரியும். நான் எப்படி உண்டானேன் என்பது எனக்குத் தெரியவில்லை. கடவுள் தான் என்னை உண்டாக்கி யிருத்தல்வேண்டும்.

ஞா.—அப்பா, இல்லது வாராது, உள்ளது போகாது என்பது தருக்க நூலின் துணிபு. முன் ஒருபோதும் இல்லாதபொருள் பின் ஒரு காலத்திலும் உண்டாகாது. ஆதலால் உன்னைக் கடவுள் ஒருபோதும் உண்டாக்கினதில்லை. ஆதியும் அந்தமுமின்றி, அதாவது தோற்றமும் நாசமும் இல்லாமல், நீ எக்காலத்தும் உண்டு.

சொ.—அப்படியானுல் கடவுள் உலகத்தையும் உயிர்களையும் உண்டாக்கினுர் என்று சொல்வது பொய்யா.

ஞா.—அதுபொய்யல்ல. அதற்குப்பொருள்வேறு. ஜனங்கள் அதின் கருத்தை நன்றுயறியாமல் பலபலமாதிரியாகப் பேசுவார்கள்.

சொ.—ஆனுல் அதற்குச் சரியான பொருள் யாது?

ஞா.—உலகமென்பது சேதனம் அசேதனம் என்னும் இருவகைப் பொருள்களாலாகிய பிரபஞ்சம். சேதனம் என்பன அறிவுடைய பொருள்கள். இவை உயிர்கள் எனவும் ஆன்மாக்கள் எனவும் சொல்லப்படும். அசேதனம் என்பன நிலம் நீர் தீ காற்று முதலிய அறிவில்லாதபொருள்கள். இவை சடப் பொருள்கள் என்றுசொல்லப்படும். இவை தனு கரணம் புவனம் போகம் என்று நான்கு வகைப்படும். இவற்றுள் தனு என்பது உயிர்கள் எடுக்கும் சரீரம். கரணம் என்பது அச் சரீரத்திலுள்ள மெய், வாய், கண், மூக்குச், செவிமுதலிய புறக் கருவிகளும் மனம்முதலிய உட்கருவிகளும். புவனம் என்பது உயிர்கள் பிறவியெடுத்து வசிக்கும் இடங்கள். போகம் என்பது உயிர்கள் அனுபவிக்கும் இன்பதுன்பங்கள். கடவுள் உயிர்களுக்குவேண்டிய தனு கரண புவன போகங்களைக் கொடுத்தலே படைப்பாகும்.

சொ.—முன் இல்லாத உயிர்களைப்படைக்க கடவுளால் இயலாதோ?

ஞா.—அவர் சர்வசக்தியுடையவர். வித்தில்லாமல் விளைவு செய்ய வல்லவர். ஆனாலும், அவர் உயிர்களைப் படைக்கவேண்டிய நிமித்தமில்லை.

சொ.—கடவுளைப்போலவே நானும் எப்போதும் இருந்தால் அவருக்கும் உயிர்களுக்கும் உள்ள வித்தியாசம் யாது?

ஞா.—அவர் ஒருவர். உயிர்கள் பல, அளவிடற்கரியன. அவர் ஞானமயமாயிருப்பவர். உயிர்கள் அஞ்ஞானமயமாயிருப்பன. அவர் இன்பமயமாயிருப்பவர். உயிர்கள் துக்கமயமாயிருப்பன. அவர் பேரறிவுடையவர். உயிர்கள் சிற்றறிவுடையன. அவர் சுதந்திரர். உயிர்கள் பரதந்திரமுடையன. அவர் அளவிலாற்றலுடையவர். உயிர்கள் தாம் எடுக்கும் சரீரங்களுக்கேற்ற அற்ப ஆற்றலுடையன. அவர் சர்வவியாபி. உயிர்கள் சரீரத்தினளவாய் வியாபித்திருப்பன. ஆகலால் உயிர்கள் அவரைப்போல் நித்தியமாயிருத்தலினாலேயே அவருக்குச் சமானமாய் விடமாட்டா.

சொ.—சுவாமி, அவர் உயிர்களுக்குச் சரீரத்தைக் கொடாமல் சும்மா விருந்துவிடக்கூடாதா? அப்படியிருந்தால் யாருக்கு என்னகெடுதி விளையும்.?

ஞா.—உயிர்கள் அஞ்ஞானமயமாயிருந்துகொண்டு துக்கத்திலே ஆழ்ந்து கிடக்கும்.

சொ.—உயிர்களுக்கு அஞ்ஞானம் எப்படிவந்தது?

ஞா.—செம்பினிடத்திலே இயற்கையாகவே களிம்பு இருப்பது போல் உயிர்களிடத்தில் இயற்கையாகவே ஆணவம் என்னப் படும் ஒரு மலம் இருக்கிறது. அந்த மலத்தினுற்ருன் உயிர் கள் தம் அறிவு ஆற்றல் முதலியவற்றை இழந்து அஞ்ஞான மயமாயிருந்து வருந்துகின்றன. ஆதலால் உயிர்கள் அறிவு விளங்கி ஆணவமலத்தின் வலி படங்கப்பெற்றுத் தன் திருவடி நீழலாகிய பேரின்பத்தைப் பெறவேண்டி அவைகளுக் குச் சரீரங்களைக் கொடுக்கிருர்.

சொ.—ஆனல், நான் இதுவரையில் அளவற்ற பிறவிகளெடுத்தும் எனக்கேன் இன்னும் அஞ்ஞானம் நீங்கித் துன்பம் ஒழிய வில்லை.

ஞா.—அணுவளவாயினும் அறிவும் செயலும் இன்றி ஆணவமலத் தால் விழுங்கப்பட்டிருந்த உனக்குக் கடவுள் கொடுத்த சரீரத் தைக்கொண்டு, அவர் வேதாகமங்களிற் கூறிய விதிவிலக்கு களை யறிந்து நடந்து அவர் திருவடியின்பத்தைப்பெற முயற்சி செய்யாமல், நீ எடுக்கும் சரீரந்தோறும் அவ்வச்சரீரத்திலும் அச்சரீர சம்பந்தமாய் வரும் மனைவி மக்கள் மாடு வீடு முதலிய வைகளிலும் பற்றுவைத்து வினைகளைப் பெருக்கிக்கொண் டிருக்கிருய். ஆதலால் அவ்வினைப்பயன்களை அநுபவித்தற்கு நீ மீண்டுமீண்டும் ஓயாமல் பிறந்து வருந்துகின்ருய்.

சொ.—களிம்போடு கூடிய செம்புபோல் ஆணவமலத்தோடுகூடி அஞ்ஞானமயமாயிருந்த என்மீது கடவுள் இரக்கம்வைத்து நான் அறிவு விளங்கி உய்யும்படி எனக்குச் சரீரத்தைக் கொடுத்தாரெனில், நான் என் சரீரமுதலியவற்றின்மீது பற்று வைத்துப் பாழாகாதபடி செய்ய அவராலாகாதோ.?

ஞா.—அவராலாகாத காரியம் ஒன்றும் இல்லை. ஆனலும் நீ செய் யும் கன்மத்தை அநுபவிக்கவேண்டியது நியதியாம்.

சொ.—ஆனல் கடவுள் சரீரத்தைக்கொடுத்தபின் எனக்குக் கன்மம் வந்ததோ, கன்மத்தினுல் சரீரம் வந்ததோ.?

ஞா.—மரம் முந்தி உண்டாயிருக்குமோ, வித்து முந்தி உண்டா யிருக்குமோ. தெரியுமா?

சொ.—வித்துக்கு மரமும், மரத்துக்கு வித்தும் ஆதாரமாயிருந்த லால் முதலில் உண்டானது வித்து அல்லது மரமென்று சொல்லக் கூடியதாயில்லை.

ஞா.—அப்படியே, கன்மத்துக்குச் சரீரமும் சரீரத்துக்குக் கன்ம மும் காரணமாம். இது அனாதியாகவே இப்படி இருந்து வருகிறது. காலம் என்னும் தத்துவத்தைத் தரிசித்த ஞானி களுக்கு இது நன்குவிளங்கும்.

சொ.—ஆனால் பிறவி எப்படித்தான் ஒழியும்.

ஞா.—சரீரத்தின்மீதும் பணத்தின்மீதும் மனைவிமக்கள் மீதும் வைத்த ஆசையைவிட்டு கடவுள்மீது ஆசைவைத்தால் பிறவி ஒழியும். பேரின்பம் உண்டாம்.

சொ.—இப்போதுதான் என் சந்தேகம் ஒழிந்தது. இதற்கு நான் தங்களுக்கு அனேக நமஸ்காரம் செய்கிறேன். இனிநான் உலகப்பற்றையொழித்துக்கடவுளை வணங்கியுய்யும்படி தாங் கள் ஆசீர்வாதம் செய்தல்வேண்டும்.

ஞா.—அப்படியே யாகுக, போய்வாரும்.

சொ.—நமஸ்காரம், போய் வருகிறேன் சுவாமி.

---

## மாச பௌர்ணை பூஜாவிதி.

---

இது

சைவாகமங்கள் இருபத்தெட்டனுள் ஒன்றாகிய காரணாகமத் தில் மாச பூஜாவிதிப் படலத்திலும், மாசபூஜாத் திரவிய விதிப்பட லத்திலும் கூறப்பட்டுள்ளது.

ஆனிமாதம்.

| | | |
|---|---|---|
| க | பாத்யத்ரவியம் | பச்சைகர்ப்பூரம். |
| உ | ஆசமனத்ரவியம் | கர்ப்பூரம். |
| ங | அர்க்யத்ரவியம் | எள். |
| ச | அபிஷேகஜலத்ரவியம் | புன்னைப்பூ, நாகமல்லி, நந்தியாவர்த்தம், கருவூமத்தம் பூ, வெள்ளெருக்கம்பூ, மகிழம்பூ, ஆக-சு. இது புஷ்போதகம். |

| | | |
|---|---|---|
| ரு | வஸ்த்ரம் | பச்சைப்பட்டு. |
| சு | சந்தனத்ரவியம் | கோரோசனம். |
| எ | ஆபரணம் | பத்மராகமணி. |
| அ | புஷ்பம் | கடப்பம்பூ, சிவப்புச்சண்பகப்பூ, தாமரைப்பூ, நீலப்பாதிரிப்பூ, காக்கட்டான்பூ, ஆக-ரு. |
| கூ | தூபத்ரவியம் | வெல்லம், கர்ப்பூரம், சந்தனம், ஆக-ந. |
| க0 | தீபசங்கியை | உ00. |
| கக | மந்த்ரான்னத்ரவியம் | அரிசி, பயற்றம்பருப்பு, மஞ்சள், நெய், உப்பு, ஆக-ரு. இது அரித்ரான்னம். |
| கஉ | கறியமுது | பலாக்காய். |
| கங | பானீயஜலம் | பொன்சேர்த்தரைத்த சந்தனம், கரைத்தஜலம், ஆக-உ. இது ஹேமோதகம். |
| கச | முகவாசம் | குங்குமப்பூ. |
| கரு | ராகம் | வியாளஸ்ரேணி. |
| கசு | தாளம் | உத்காதம். |
| கஎ | நிருத்தம் | ஸ்வாலீடம். |
| கஅ | வாத்யம் | முரவம். |
| ககூ | தேவதாமந்த்ரம் | சூலாயுதம். |
| உ0 | பத்ரம் | விளா. |
| உக | மண்டலம் | மஞ்சுளம். |
| உஉ | வில்வம் | அறுகு, நாயுருவி, நொச்சி, விளா, வில்வம், ஆக-ரு. |
| உங | குண்டம் | வ்ருத்தம். |
| உச | இத்மம் | அரசு. |
| உரு | சமித்து | சண்பகம். |
| உசு | ஆகுதிஜபம் | கூசு. |
| உஎ | முக்காலி | மாவிலிங்கன். |

| | | |
|---|---|---|
| உஅ | ப்ரதானத்ரவியம் | வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம். |
| உக | பாக்கு | ருகூ. |
| கூ0 | வெற்றிலை | கஅகூ. |
| கூக | மஹாநிவேதனம். | |
| கூஉ | ஆராதனம். | |
| கூகூ | பாராயணம். | |
| கூச | வாத்யம். | |
| கூரு | பூஜா உற்சவம். | |
| கூசா | தானம். | |
| கூஎ | பலம் | சிந்திதமனோரதசித்தி. |

---

## ஆடி மாதம்.

| | | |
|---|---|---|
| க | பாத்யத்ரவியம் | பன்னீர். |
| உ | ஆசமனத்ரவியம் | சந்தனம். |
| கூ | அர்க்யத்ரவியம் | செம்பாளை. |
| ச | அபிஷேகஜலத்ரவியம் | பலாப்பழம், தேங்காய், கொடிமாதுளை, குமட்டிமாதுளை, நாரத்தை, எலுமிச்சை, மாம்பழம். ஆக-எ. இது பலோதகம். |
| ரு | வஸ்த்ரம் | கருப்புப்பட்டு. |
| சா | சந்தனத்ரவியம் | கர்ப்பூரம், அகில். |
| எ | ஆபரணம் | முத்துத்தாழ்வடம். |
| அ | புஷ்பம் | ஊமத்தம்பூ, கருநெய்தற்பூ. ஆக-உ. |
| கூ | தூபத்ரவியம் | சந்தனம், கோஷ்டம், மைஜாக்ஷி, பச்சைக்கர்ப்பூரம். ஆக-ச. |
| க0 | தீபசங்கியை | உஉ0. |

| | | |
|---|---|---|
| கக | மந்த்ரான்னத்ரவியம் | மூங்கிலரிசி, பால், வெல்லம், ஏலம், மிளகு. ஆக-ரு. இது பரமான்னம். |
| கஉ | கறியமுது | பூசினிக்காய். |
| கந | பானீயஜலம் | புதுத்தோண்டியின் ஜலம். இது ஆமோதகம். |
| கச | முகவாசம் | ஏலக்காய். |
| கரு | ராகம் | சஷாவம். |
| கசு | தாளம் | பிரதாபசேகரம். |
| கஎ | நிருத்தம் | தண்டபாதம். |
| கஅ | வாத்யம் | வாதித்ரகம். |
| கக | தேவதாமந்த்ரம் | பவோத்பவம். |
| உ0 | பத்ரம் | வில்வம். |
| உக | மண்டலம் | கௌரீதிலகம். |
| உஉ | வில்வம் | அறுகு, நாயுருவி, நொச்சி, விளா, வில்வம். ஆக-ரு. |
| உந | குண்டம் | ஷோடசகோணம். |
| உச | இத்மம் | கருங்காலி. |
| உரு | சமித்து | கல்லாலை. |
| உசு | ஆகுதிஜபம் | க00. |
| உஎ | முக்காலி | பலா. |
| உஅ | ப்ரதானத்ரவியம் | திரட்டுப்பால். |
| உக | பாக்கு | எக. |
| ந0 | வெற்றிலை | உஉந. |

நக மஹார்நிவேதனம்.
நஉ ஆராதனம்.
நந பாராயணம்.
நச வாத்யம்.
நரு பூஜா உற்சவம்.
நசு தானம்.

| | | |
|---|---|---|
| நஎ | பலம் | சத்ருநாசம். |

## இதனடியில் கூறிய அறுவகை உபசாரங்களை

### ஒவ்வொரு மாதங்களின் பௌர்ணை திதியில்

### காரணுக மோக்ஷமாய் அனுசரிக்கவேண்டும்.

---

| | |
|---|---|
| மஹாநிவேதனமாவது | ப்ரபூதம், அவிசாதி, திருப்பாவாடை, சமஸ்த நைவேத்யங்களுமாம். |
| ஆராதனமாவது | ஷோடசோபசாராதி, தீபாராதனை களுமாம். |
| பாராயணமாவது | ஆசீர்வாதாதி, வேதாகமபுராண திராவிட ஸ்தோத்ரங்களுமாம். |
| வாத்யமாவது | நாகஸ்வராதி, வீணுவேணு வாத்யங் களுமாம். |
| பூஜா உற்சவமாவது | சிவாசாரிய பூஜாவந்தன ஸ்தோத்ர விபவ உற்சவங்களுமாம். |
| தானமாவது | பிராமணுதியர்கட்கு போஜனம், சமஸ்த தானங்களுமாம். |

மாசபௌர்ணை பூஜாவிதி விலை அணு. 4.

இதில் பன்னிரண்டு மாதங்களுக்கும் தனித்தனி பௌர்ணை பூசாதிரவிய முதலியன கூறப்பட்டுள்ளன.

இந்நூல் வேண்டுவோர் சென்னை சிந்தாதிரிப்பேட்டை ஐயா முதலி வீதி 36-வது வீட்டில் மயிலை அழகப்ப முதலியாரிடம் பெற்றுக்கொள்க.

# சிவாசாரியர்கள்.

(ஸ்ரீலஸ்ரீ சூளை சோமசுந்தர நாயகரவர்கள் இயற்றியது.)

---

வேத சிவாகமங்களிலும், பிறநூல்களிலும் ஆதிசைவர்மகிமை விஸ்தாரமாய்ப் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. பூர்வம் யாம் வெளிப்படுத்திய "ஆதிசைவப்பிரபாவ" த்தில் அவர்கள்பெருமை இனிது பிரகாசப்படுத்தப்பட்டிருக்கின்றது. "சிவத்விஜோத்கர்ஷ தீபிகை" என்னு நூலொன்றும் எம்மால் செய்யப்பட்டிருக்கின்றது. அது விரைவில் வெளிவரும். நிற்க,

இப்போது சுருக்கமாய்ச் சில விஷயமெழுதி அவற்றின் பிரமாணத்தையு மெடுத்துக்காட்டி ஸாதுக்களை யுவப்பிப்பாம்.

1. சிவவேதியர்களுக்கு வீடு கட்டிக்கொடுத்தல், தானமுதலியவை செய்தல் ஆவசியகமென்று ஸ்காந்தம் தக்ஷகாண்டம் 37-வது அத்தியாயம், 33-வது சுலோகத்திலும், உபதேசகாண்டம் 39-வது அத்தியாயம், 11-வது சுலோகத்திலுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது.

2. சிவத்விஜர்களே ஆசாரியர்களாய் வரிக்கத்தக்கவர்களென்று உபதேசகாண்டம் 39-வது அத்தியாயம் 17-வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

3. ஆதிசைவர்கள் சிவசொரூபிகளென்று ஷை காண்டம் 39-வது அத்தியாயம் 18-வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

4. சிவபிராமணர்கள் (புஷ்பகிரிசந்தானத்தார்) மிகப்பூஜ்யர்களென்று ஷை காண்டம் 40-வது அத்தியாயத்தில், 52-53-54-56-57-வது சுலோகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது

5. மேற்கூறியபடியே ஷை அத்தியாயம் 75-81-வது சுலோகங்களிலுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது.

6. ஆமர்த்தகி, கோளகி, புஷ்பகிரி, சந்தானகிரி முதலிய திவ்யமடங்களின் சந்தானத்தார் ஆதிசைவர்களென்றும், ஸ்ரீமுகுந்தேசுவரஸ்வாமிக்குப் பூஜைசெய்கின்றவர்கள் சிவபிராமணர்களென்றும் ஷை அத்தியாயம் 38-45-வது சுலோகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

7. ஆமர்த்தகிமடத்தைச்சார்ந்த சிவபிராமணர்களது பிறப்பு ஸர்வோத்தமமென்று 45-வது அத்தியாயம், 44-வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

8. சிவபிராமணர் ஜகத்குருமூர்த்திகளென்று 49-வது அத்தியாயம், 30-31-வது சுலோகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

9. சந்தனகிரிவம்சத்திற்பிறந்த சிவபிராமணராகிய தற்புருஷரென்பவர் ஜகத்குருவாயினர் என்று 56-வது அத்தியாயம், 8-வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

10. இன்னு மிவ்வாறு போதிக்கும் வசனங்கள் பலவுள.

இவற்றைத் தெளிந்தவர்கள் பிராமணாதி சாதுர்வர்ணத்தாருக்கும் ஸம்ஸ்காரங்களை நடத்தியுபதேசிக்கவல்ல பரமாசாரியர்களிவரென்று சுலபமாயறியலாம். இவர்கள் சிவபெருமானால் நேரே தீக்ஷிக்கப்பெற்றவர்கள். இவர்களிடம் தீக்ஷையடைந்த அநந்தரமே பிராமணாதி சாதுர்வர்ணத்தாரும் தத்தஞ்சாதியிலும், தமக்குக் கீழ்ச்சாதிகளிலும் ஆசாரியத்வம் வகிக்க வுரியவராவர். இதனுண்மை தெரியவேண்டின், திருக்கோயில்களினடக்கும் ஆசாரத்தைக் கண்டறிக. பிராமணாதி சாதுர்வர்ணத்தாருஞ்சிவாலய தரிசனத்தின் பொருட்டு வருகின்றார்கள். அவர்களுக்குச் சுவாமிதரிசனஞ் செய்வித்து விபூதி, கந்தகுசுமாதி பிரஸாதங்களை ஆசீர்வாத பூர்வகமாயளித்து அநுக்ரகிக்கும் சிவவேதியரது பரமாசார்யத்வத்தை யாவர்தான்மறுக்கலாம்? இவர்களுக்கும் சிவபரஞ்சுடருக்கும்பேதமில்லை யாகையால் இவர்களைச்சிவனென்றே வழிபட்டு உய்யும்வழி தேடுவர் பெரியோரென்க. "தாவர சங்கமங்களென்றிரண்டுருவினின்று, மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க் கருணைவைப்பன்" என்னுந் திருவாக்கில், ஸ்தாவராராதனம், ஜங்கமாராதனம் என இருவிதாராதனைங்கள் பெறப்பட்டன. இவற்றுள், ஸ்தாவராராதனம் ஸ்ரீசிவலிங்கப்பெருமானை வழிபடுதலும், ஜங்கமாராதனம் சிவாசாரியரை வழிபடுதலுமேயாம். இவ்வுண்மை அநுபவசித்தமாயிருத்தலால் இதனையே கடைப்பிடித்து உலகம் க்ஷேமமடைந்துய்யக்கடவது. சுபம்.

திருச்சிற்றம்பலம்.

———